ஆர்.பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) எழுதிய 'சப்யாதா கி யாத்ரா: சிந்து சே வைகை'

# 'ஒரு பண்பாட்டின் பயணம் : சிந்து முதல் வைகை வரை" இந்தி மொழி பெயர்ப்பு நூல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, அக். 8-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.10.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளையின் அறங்காவலர் ஆர்.பாலகிருஷ்ணன், அவர்கள் எழுதிய 'சப்யாதா கி யாத்ரா: சிந்து சே வைகை' (ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை) இந்தி மொழிபெயர்ப்பு நூலினை வெளியிட, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகமும் இந்தி மொழியின் முன்னணிப் பதிப்பாளரான வாணி பிரகாஷனும் இணைந்து இந்த நூலை வெளியிட்டுள்ளார்கள்.

சிந்து சமவெளி நாகரிகம் விட்ட இடமே தமிழின் சங்கம் தொட்ட இடம் என்பதை இந்த நூலில் ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் சான்றுகளுடன் நிறுவியிருக்கிறார்.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் செயல்படுத்தி வரும் திசைதோறும் திராவிடம், இந்த நூல் வெளியீடு வழியாக இந்தி மொழிக்கும் விரிவாகியிருக்கிறது. இதன்மூலம், 60 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் இந்தி மொழியின் முன்னணிப் பதிப்பு நிறுவனமான வாணி பிரகாஷன் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்துடன் இணைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. இந்த நூலை சுரபி கத்யால், ஜோதி லாவண்யா ஆகியோர் இந்தியில் மொழிபெயர்ப்பு செய்துள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு. பி. சந்தர மோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மரு. மா. ஆர்த்தி, அகில இந்திய குடிமைப்பணி பயிற்சி மைய முதல்வர் முனைவர் தே.ச. சரவணன், வாணி பிரகாஷன் பதிப்பகத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி அதிதி மகேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோயில்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு

# உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் - குடும்ப ஓய்வூதியம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி தொடங்கி வைத்தார்!

**சென்னை, அக்.8-**

**திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் ரூ.5,000/ மற்றும் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் ரூ.2,500/-யை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.10.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை ரூ.4,000/ லிருந்து ரூ.5,000/ஆகவும், குடும்ப ஓய்வூதியத்தை ரூ.2,000/ லிருந்து ரூ.2,500/ஆகவும் உயர்த்தி, தொழிலாளர் சேமநல நிதி (EPF) மூலம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு முதன்முறையாக துறை நிலையிலான ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத்திற்கு இணையாக கருணைக் தொகை (EX-gratia) வழங்கி, 3,037 ஓய்வூதியதாரர்கள் மற்றும் 769 குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 12 நபர்களுக்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியதிற்கான காசோலைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தொன்மை வாய்ந்த திருக்கோயில்களை பழமை மாறாமல் புனரமைத்து குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல், திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற பணியாளர்களின் நலன்களை பாதுகாத்தல் போன்ற பல்வேறு பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது. மேலும் சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

2025 - 2026 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை சட்டமன்ற அறிவிப்புகளில் "திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்று, துறை நிலை ஓய்வூதியம் பெறும் திருக்கோயில் பணியாளர்களுக்கு தற்போது ரூ. 4,000/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஓய்வூதியம் ரூ.4,000/-லிருந்து ரூ.5,000/- ஆக உயர்வு செய்யப்படும் எனவும், துறை நிலை குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு தற்போது ரூ.2,000/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஓய்வூதியம் ரூ.2,000/-லிருந்து ரூ.2,500/- ஆக உயர்வு செய்யப்படும்" எனவும், "திருக்கோயில்களில் பணி புரிந்து ஓய்வு பெற்று, தொழிலாளர் சேமநலநிதி (EPF) ஓய்வூதியம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் தற்போது ரூ.900/- முதல் ரூ.2,190/ வரை மட்டுமே ஓய்வூதியமாக பெற்று வருகின்றனர். இவர்களுக்கு துறை நிலையிலான ஓய்வூதியம்பெறும்பணியாளர்களுக்கு இணையாக கருணைத்தொகை (EX-gratia) வழங்கப்படும். இத்தொகை ஆணையர் அலுவலகத்தில் பேணப்படும் மையநிதி வட்டித் தொகையிலிருந்து வழங்கப்படும் என்றும், மேலும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் கருணைத் தொகை வழங்கப்படும்" என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்புகளை செயல்படுத்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதியத் தொகை ரூ.5,000/மற்றும் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ.2,500/க்கான காசோலைகளையும், தொழிலாளர் சேமநல நிதி (EPF) மூலம் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு துறை நிலையிலான ஓய்வூதியத்திற்கு இணையாக கருணைக் தொகையை அளித்து அதற்கான காசோலைகளையும் வழங்கினார். இதன்மூலம் துறை நிலையிலான மற்றும் தொழிலாளர் சேமநலநிதி மூலம் ஓய்வூதியம் பெறும் 3,037 ஓய்வூதியதாரர்கள் மற்றும் 769 குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் ந.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி. பழனி, பொ.ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 'ஓரணியில் புதுச்சேரி' என்ற தலைப்பில் உறுப்பினர் சேர்க்கை!

## எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. தொடங்கி வைத்தார்!

*புதுச்சேரி, அக்.8-*

புதுச்சேரி மாநில தி.மு. கழகத்தின் சார்பில் "உடன் பிறப்பே வா" பரப்புரை முன்னெடுக்கும் முதல்கட்ட உறுப்பினர் சேர்க்கும் பணி நேற்று முன்தினம் காலை தொடங்கியது.

முகாமிற்கு மாநில தி.மு.க. அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தலைமை தாங்கினார். காரைக்கால் மாவட்டச் செயலாளர் ஏ. எச்.எம்.நாஜிம், அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.பி.திருநாவுக்கரசு, மாநில துணை அமைப்பாளர் வி.அனிபால் கென்னடி, பொருளாளர் இரா. செந்தில்குமார், மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல்.சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், தலைமைக் கழகத்தால் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள திமுக கொள்கைப் பரப்புச் செயலாளர், எஸ். ஜெகத்ரட்சகன், எம்.பி., அவர்கள் கலந்து கொண்டு, முத்தியால்பேட்டை பெருமாள் கோவில் அருகில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன், பொதுக் குழு உறுப்பினர் மு. பிரபாகரன், தொகுதி செயலாளர் சவுரிராஜன் ஆகியோர் முன்னிலையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாலசுப்ரமணியன் இல்லத்தில் இருந்து தி.மு.க. உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்தார். முன்னதாக ஒதியஞ்சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து வி.அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., தொகுதி செயலாளர் சக்திவேல் முன்னிலையில் உப்பளம் தொகுதியிலும், எல். சம்பத், எம்.எல்.ஏ., தொகுதி செயலாளர் திராவிடமணி ஆகியோர் முன்னிலையில் முதலியார்பேட்டை தொகுதியிலும், பொதுக்குழு உறுப்பினர் வே. கார்த்திகேயன், தொகுதி செயலாளர் செ.நடராஜன் ஆகியோர் முன்னிலையில் நெல்லித் தோப்பு தொகுதியிலும், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.கோபால், தொகுதி செயலாளர் இரா. சக்திவேல் ஆகியோர் முன்னிலையில் உருளையன்பேட்டை தொகுதியிலும் வீடு, வீடாக சென்று தி.மு.க. உறுப்பினர் சேர்க்கும் பணியை தொடங்கி வைத்தார்.

இந்த முகாமில், முன்னாள் சபாநாயகர் பழநி ராஜா, மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ.தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சி.பி. திருநாவுக்கரசு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, சண். குமரவேல், கே.எம்.பி.லோகையன், ஜே.வி.எஸ்.ஆறுமுகம், ப. காந்தி, டி.அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் வெ. ராமசாமி, ப. செல்வநாதன், பா.செ.சக்திவேல், ந. தங்கவேலு, பெ.வேலவன், வீ. சண்முகம், எஸ். தர்மராஜன், ஆர்.கோகுல், ஆர். ரவீந்திரன், டி. செந்தில் வேலன், கே.பி. இளம்பரிதி, பெ. பழநி, எஸ். எஸ். செந்தில்குமார், வே. மாறன், நா. கோபாலகிருஷ்ணன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், பி.சா. இளஞ்செழியபாண்டியன், எல். மணிகண்டன், து.சக்திவேல், கோ. தியாகராஜன், ர. சிவக்குமார், ரா.ஆறுமுகம், ப. வடிவேல், ஜெ.மோகன், பி. ஆர். ரவிச்சந்திரன், வெ. சக்திவேல், க.ராஜாராமன், செல்வ. பார்த்திபன், கலிய. கார்த்திகேயன், செ.ராதாகிருஷ்ணன், ம. கலைவாணன், சி.சத்தியவேலு, அணிகளின் அமைப்பாளர்கள் தொமுச அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி ச. பரிமளம், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், விவசாய அணி வெ. குலசேகரன், வர்த்தகர் அணி சு.ரமணன், இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, மீனவர் அணி ந. கோதண்டபாணி,

ஆதிதிராவிடர் நலக்குழு சி.ஆறுமுகம், விவசாய தொழிலாளர் அணி ப.தவமுருகன், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை கி. சங்கர் (எ) சிவசங்கரன், பொறியாளர் அணி ஆ. அருண்குமார், நெசவாளர் அணி ந.செந்தில்முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ந.ரவிச்சந்திரன், அமைப்புசாரா ஓட்டுநர் அணி ம. மதிமாறன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அ.முகம்மது ஹாலிது, மருத்துவர் அணி லூ. ஆனந்த் ஆரோக்கிய ராஜ், தகவல் தொழில்நுட்ப அணி தாமோ. தமிழசரன், சுற்றுச்சூழல் அணி த. முகிலன், அயலக அணி அ. ஷாஜகான், மகளிர் தொண்டர் அணி சுமதி மற்றும் அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக பங்கேற்றனர்.



தஞ்சாவூர் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு சார்பில் கண்காணிப்பு பொறியாளர் அலுவலக புதிய கட்டிடத்தை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர் சாக்கோட்டை க.அன்பழகன், எம்.எல்.ஏ, தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன், எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி., ச.முரசொலி எம்.பி, நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தலைமைப் பொறியாளர் பொறிஞர் கு.கோ.சத்திய பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை, என்.அசோக்குமார், மாநகராட்சி மேயர் சண.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி மற்றும் பலர் பங்கேற்றனர்.

உண்மை தெரியும் வரை – நின்ற கருத்தில்

# நிலைபெற்று நிற்க வேண்டும்!



ஒருநாள்...
முரசொலிமாறன் வீடு

கலைஞர் மாறன்
டி.ஆர்.பாலு – நான்
நால்வரும்
உரையாடிக்கொண்டிருந்தோம்

ஒருகாலத்தில்
கலைவடிவமாகக் கையாளப்பட்ட
இயைபுச் சொற்கள்
இன்று எப்படி இழிந்துவிட்டன
என்ற புள்ளியில்
பேச்சு மையம்கொண்டது

'இயைபுச் சொற்களைப்
பொது மேடைகளில்
பொருளோடு பயன்படுத்தினார்
அண்ணா' என்றேன்

இந்தி எதிர்ப்புப் போரில்
துப்பாக்கிச் சூட்டில்
இறந்து போனவர்களைப்
பேசவந்த அண்ணா,
'முதலமைச்சருக்கு உள்ளம்
இருக்குமென்று நினைத்தேன்;
ஆனால், உள்ளம்
இருக்கவேண்டிய இடத்தில்
அவருக்கொரு
பள்ளம் இருக்கிறது என்றார்.
அண்ணாவின்
இயைபுத் தொடரில்
எவ்வளவு நயம்' என்றேன்

சட்டென்று குறுக்கிட்ட
முரசொலி மாறன்
'அது
அண்ணா சொன்னதில்லை;
கலைஞர் சொன்னது' என்றார்

திடுக்கிட்ட நான்
சற்றே அமைதிகாத்தேன்

முரசொலிமாறன்மீது கொண்ட
பெருமதிப்பால்
என குரலை உயர்த்தாமல்
'இல்லை அது அண்ணா
சொன்னதுதான்' என்றேன்
அமைதியாக; அழுத்தமாக

'இல்லை இல்லை
அது கலைஞர் சொன்னதுதான்'
என்று மாறன்
உறுதியாய் உரத்துச் சொன்னார்

நான் புன்னகையோடும்
பொறுமையோடும்
'உறுதியாய்ச் சொல்லுகிறேன்;
இது அண்ணா சொன்னதுதான்'
என்றேன்

எங்கள் தர்க்கம் நீண்டது

காதுகளை
எங்களுக்குக் கொடுத்துவிட்டு
கண்களைக்
கூரையில் போட்டிருந்தார்
கலைஞர்

எங்கள் வாதம் ஓயவில்லை

அவரவர் கருத்தில்
நிலையாய் நின்றோம்

சில நிமிடங்கள் கழித்து
'அது அண்ணா சொன்னதுதான்'
என்று கலைஞர்
மௌனம் கலைத்தார்

நாங்கள் அமைதியானோம்

காரில் திரும்பும்போது
'உங்களுக்குத் தான்
உண்மை தெரியுமே!
அதை
முதலிலேயே சொல்லாமல்
ஏன் நீண்ட மௌனம் காத்தீர்கள்'
என்று கலைஞரைக் கேட்டேன்

'நீங்கள் இருவரும்
அவரவர் கருத்தில்
உறுதியாக நிற்கிறீர்களா
என்று பார்த்தேன்'
என்றார் சிரித்துக்கொண்டே

எத்துணை பெரிய சோதனை!
புரிந்தது

மனிதனாய் இருந்தால்
நின்ற கருத்தில்
நிலைபெற்று நிற்கவேண்டும்
உண்மை தெரியும்வரை



**கவிப்பேரரசு வைரமுத்து**

# இன்னும் கேள்விகள் எதுவும் உள்ளதா?

கேள்விகள் எப்படிக் / கேட்கக் கூடாதென்று /
ஆளுநரிடம் நாம் / அனைவரும் கற்போம் !

வில்லின் அம்புபோல் / விடைகளை அடுக்கும்

சொல்லின் ஆற்றலைச்/
சுடர்மிகு முதல்வர்

விடைகள் மூலம் / விளங்கிக் கொள்வோம் !

தடைகள் யாவையும் / கடந்து செல்வோம் !

நாட்டைக் காக்க /
"நீட்"டை எதிர்த்தும் /

ஆட்டம் போடும் / ஆரியம் எதிர்த்தும் /

தமிழை மறைக்கும் / இந்தியை எதிர்த்தும் /

தமிழ்நாடு போராடும் ! தமிழ்நாடு வெல்லும்!

ஆளுநர் பணியை / மட்டும் தவிர்த்து /

அனைத்திலும் தலையிடும் / ஆளுநர் அவர்களே

எங்கள் முதல்வர் / இயம்பியது போதுமா? /

இன்னும் கேள்விகள் / எதுவும் உள்ளதா?



**சுப.வீரபாண்டியன்**